## ஒரு பார்வை - பகுதி 1

**போருக்கு வராத நயவஞ்சகர்கள், பல சாக்குப்போக்குகளை கூறி, அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்வர். மஜ்ஜிதுல் ஜிராரைக் கட்டியதன் நயவஞ்சக உள்நோக்கம், பரிசுத்தமான எண்ணத்துடன் அமைக்கப்பட்ட கூபா பள்ளி பற்றிய குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது. தபூக் போரின் போது, போருக்குச் செல்லாமல் இருந்த மூன்று சகாபாக்கள் பற்றிய செய்திகள் கூறப்பட்டு, உண்மையாக தவ்பா செய்பவர்களை மட்டுமே அல்லாஹ் மன்னிப்பான் என்பதையும் காட்டப்பட்டுள்ளது.**

## தராவிஹ் - 9: (ரக்அத் 1 முதல் 4)

### ஸூரா - 9, அத்தவ்பா; வசனம்: 94 - 129; பிரிவு: 12 - 16

1. **நீங்கள் போர் முடிந்து திரும்பி வரும்போது, போருக்கு வராத நயவஞ்சகர்கள், உங்களிடம் சாக்குப் போக்கு கூறுவர். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 12)**

2. **அவர்கள் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து கூறுவர். நீங்கள் அவர்களை புறக்கணித்து விடுங்கள். நிச்சயமாக அவர்கள் அசுத்தமானவர்கள். அவர்கள் புகலிடம் நரகம் தான். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 12)**

3. **வேறு சிலர் தம் குற்றங்களை ஒப்புக்கொண்டனர். அவர்கள் நல்ல செயலுடன், தவறான செயலையும் கலந்து விட்டனர். அவர்களின் பாவமன்னிப்புக் கோரிக்கையை அல்லாஹ் ஏற்கலாம். நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்பவனாகவும், பெருங் கிருபையாளனாகவும் இருக்கின்றான். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 13)**

4. அல்லாஹ் தன் அடியார்களிடமிருந்து தவ்பாவை (மன்னிப்புக் கோருதலை) ஏற்றுக்கொள்கிறான். தர்மங்களையும் அங்கீகரிக்கிறான். அவன் தவ்பாவை ஏற்று அருள் புரிபவன் என்பது அவர்களுக்குத் தெரியாதா? (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 13)

5. ஊறு விளைவிப்பதற்காகவும், இறைமறுப்பை ஊக்குவிப்பதற்காகவும் விசுவாசிகளிடையே பிரிவினையை உண்டாக்குவதற்காகவும், ஒரு பள்ளிவாசலை உருவாக்கியவர்கள் நயவஞ்சகர்கள் (மஜ்ஜிதுல் ஜிராரைப் பற்றிய குறிப்பு; இது நயவஞ்சகர்கள் தங்குவதற்காக கட்டப்பட்டது). அதில் நீங்கள் தொழுகைக்காக நிற்கவேண்டாம். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 13)

6. அல்லாஹ்வின் பயத்தின் மீது பரிசுத்தமான எண்ணத்துடன் அமைக்கப்பட்ட பள்ளிதான், தொழுவதற்கு மிகத் தகுதியுடையது. (இது கூபா பள்ளியை குறிக்கும். நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு சென்றபோது அங்கு 4 நாட்கள் தங்கி இருந்து அப்பள்ளிக்கு அஸ்திவாரத்தை அமைத்தார்கள்). (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 13)

7. அங்கிருக்கும் மனிதர்கள் தூய்மையுடையோராக இருப்பதையே விரும்புகிறார்கள். அல்லாஹ் தூய்மையுடையோரையே விரும்புகிறான். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 13)

8. இணைவைப்பவர்கள் நரகவாதிகள் என்பது தெளிவாக்கத் தெரிந்த பின்னர், அவர்கள் நெருங்கிய உறவினர்களாக இருந்தபோதிலும், அவர்களுக்காக மன்னிப்புக் கோருவது நபிக்கும், இறைநம்பிக்கை கொண்டவர்களுக்கும் தகாது. (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 14)

9. நபி இப்ராஹீம், தன் தந்தைக்காக பாவமன்னிப்பு கேட்டது, அவர் தன் தந்தைக்கு அளித்த ஒரு வாக்குறுதிக்காக மட்டுமே. ஆனால் தன் தந்தை அல்லாஹ்வுக்கு விரோதியாவார் என்பது இப்ராஹீமுக்கு தெளிவானதும், அவர் அதிலிருந்து விலகிக் கொண்டார். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 14)

10. நிச்சயமாக இப்ராஹீம் அதிக பிரார்த்தனை செய்பவரும், சகிப்புத் தன்மை மிக்கவரும் ஆவார். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 14)

11. நிச்சயமாக அல்லாஹ், இந்த நபியையும், நெருக்கடியான நேரத்தில் அவரைப் பின்பற்றிய முஹாஜிர்களையும், அன்ஸாரிகளையும் மன்னித்துவிட்டான். அவர்களில் ஒரு பிரிவினருடைய நெஞ்சங்கள் (தபூக் போரின் போது ஏற்பட்ட சிரமங்கள் காரணமாக) தடுமாற முற்பட்ட பின்னரும், அவன் அவர்களை மன்னித்து அருள் புரிந்தான். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 14)

12. (தீர்ப்பு) ஒத்திவைக்கப்பட்டிருந்த அந்த மூவரையும் அல்லாஹ் மன்னித்து விட்டான். (இது தபூக் போரின் போது கஅப் பின் மாலிக், ஹிலால், மிராரா ஆகிய 3 அன்சாரிகள், தங்களுடைய அலட்சியத்தால், நபி (ஸல்) அவர்களுடன் போருக்கு செல்லவில்லை. நபி அவர்கள் திரும்பி வந்த போது, அவர்கள் தங்கள் தவறை ஒத்துக்கொண்டனர். அவர்கள் அல்லாஹ் உத்தரவு வரும் வரை காத்திருக்க சொல்லி, அவர்கள் கூட்டத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டனர்). (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 14)

13. பூமி இவ்வளவு விசாலமாக இருந்தும்கூட, அது அவர்களுக்கு சுருங்கிவிட்டது. அவர்களின் உள்ளங்களும் இறுக்கமாகிவிட்டன. (ஏனென்றால் அம்மூவரும்

சமூகத்திலிருந்து 50 நாட்கள் விலக்கி வைக்கப்பட்டனர்). (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 14)

14. அல்லாஹ் அன்றி வேறு புகலிடம் இல்லையென்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். ஆகவே, அவர்களை அல்லாஹ் மன்னித்தான். நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்பவனாகவும், மிக்க கிருபையுடையவனாகவும் இருக்கின்றான். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 14)

15. அல்குர்ஆனில் புதிய அத்தியாயம் அருளப்பட்டால், விசுவாசிகளுக்கு அவர்களுடைய விசுவாசத்தை அதிகப்படுத்தும். அதனால், அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். இறை மறுப்பாளர்களுக்கு அவர்களின் இதயத்திலுள்ள அசுத்தத்துடன், மேலும் அசுத்தத்தையே அது அதிகரித்து விடும். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 16)

16. நிச்சயமாக உங்களில் இருந்தே ஒரு தூதர் உங்களிடம் வந்துள்ளார். நீங்கள் படும் துன்பம் அவருக்குப் பாரமாக இருக்கும். அவர் உங்கள் மீது அதிக அக்கரை கொண்டவர்; இறைநம்பிக்கையாளர்களிடம் மிகுந்த பரிவும் கருணையும் உள்ளவர் ஆவார். (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 16)

17. (நபியே! இதற்குப் பின்னரும்) அவர்கள் புறக்கணித்தால், "ஹஸ்பியல்லாஹ்!" எனக்குப் அல்லாஹ்வே போதுமானவன். அவனைத் தவிர வேறு இறைவனில்லை. நான் அவனையே நம்பி இருக்கிறேன். அவன் மகத்தான 'அர்ஷின்' - அரியணையின் அதிபதி ஆவான்" என்று கூறுவீராக. . (ஸூரா - அத்தவ்பா; பிரிவு: 16)

## ஒரு பார்வை - பகுதி 2

**மக்களை வழிநடத்தவும், எச்சரிக்கவும் நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் குர்ஆனை அருளினான். மேலும் அவனே பிரபஞ்சத்தின் அனைத்து விஷயங்களையும் கட்டுப்படுத்துகிறான். குர்ஆனை மாற்ற முடியாது; நபி (ஸல்) அவர்களால் கூட மாற்ற முடியாது. மக்கள் தங்களுக்கு துன்பம் நேரும்போது அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்கிறார்கள். அதிலிருந்து விடுபட்டவுடன், அல்லாஹ்வை மறந்து விடுகிறார்கள். நினைவில் வைத்து கொள்ளுங்கள், நீங்கள் இறுதியில் தீர்ப்புக்காக அவனிடமே திரும்புவீர்கள்.**

## தராவிஹ் - 9: (ரக்அத் 5 முதல் 8)

### ஸூரா - 10, யூனுஸ்; வசனம்: 1 - 30; பிரிவு: 1 - 3

1. **அலிஃப், லாம், றா! இவை ஞானம் நிறைந்த வேதத்தின் வசனங்களாகும். (ஸூரா - யூனுஸ்; பிரிவு: 1)**

2. **மக்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காக, மக்களில் ஒருவராகிய நபிகள் (ஸல்) அவர்களுக்கு வேத அறிவிப்பு வழங்கியிருப்பது அவர்களுக்கு வியப்பாக இருக்கிறது. விசுவாசம் கொண்டவர்களுக்குத் தங்கள் இறைவனிடத்தில் பெரும் பதவியுண்டு. (ஸூரா - யூனுஸ்; பிரிவு: 1)**

3. **அல்லாஹ் வானங்களையும், பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான். அதன் அனைத்து காரியங்களையும் அவனே திட்டமிட்டு நிர்வகித்து வருகின்றான். (ஸூரா - யூனுஸ்; பிரிவு: 1)**

4. **மனிதனுக்கு துன்பம் நேரும்போது, படுத்துக்கொண்டு அல்லது, உட்கார்ந்துகொண்டு, அல்லது நின்றுகொண்டு இறைவனை பிரார்த்திக்கின்றான். ஆனால் அவனுடைய துன்பங்களை அல்லாஹ் நீக்கி விட்டாலோ, அவன் உதவி கேட்டு பிரார்த்தனையே செய்யாதவன் போல சென்று விடுகின்றான். (ஸூரா - யூனுஸ்; பிரிவு: 2)**

5. இறை மறுப்பாளர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வேறொரு குர்ஆனை கொண்டு வரும்படியும் அல்லது இந்த குர்ஆனில் மாற்றம் செய்யுமாறும் கூறினார்கள். (ஸூரா - யூனுஸ்; பிரிவு: 2)

6. அதற்கு நபியவர்கள், "நான் சுயமாக இதை மாற்றுவதற்கு எனக்கு அதிகாரம் கிடையாது. எனக்கு வஹீயாக அறிவிக்கப்படுபவற்றைத் தவிர வேறெதையும் நான் பின்பற்றுவதில்லை. என் இறைவனுக்கு நான் மாறு செய்தால், மகத்தான நாளின் வேதனைக்கு நான் ஆளாக வேண்டும் என்பதை நினைத்து நிச்சயமாக பயப்படுகிறேன்" என்றார்கள். (ஸூரா - யூனுஸ்; பிரிவு: 2)

7. மேலும், "அல்லாஹ் வேறு ஒரு குர்ஆனை கொடுக்க வேண்டும் என எண்ணினால், இதனை இறக்கியிருக்க மாட்டான். நான் நீண்ட காலம் உங்களுடன் வசித்திருக்கின்றேன், நான் பொய் சொல்பவன் அல்ல! என உங்களுக்கு புரியவில்லையா?" என கூறினார்கள். (ஸூரா - யூனுஸ்; பிரிவு: 2)

8. மனிதர்கள் ஒரே சமுதாயமாகத்தான் இருந்தனர். பின்னர், கருத்து முரண்பாடு கொண்டு பிரிந்து விட்டனர். (ஸூரா - யூனுஸ்; பிரிவு: 2)

9. அல்லாஹ்தான் உங்களைத் தரையிலும், கடலிலும் பயணிக்க வைக்கிறான். கப்பலில் இருக்கும்போது இதமான காற்றினால் அவர்கள் கொண்டு செல்லப்படுகின்றனர். அவர்கள் மகிழ்ச்சியடைகின்றனர். பின்னர் புயல் காற்று வீசி, எல்லாப் பக்கங்களிலிருந்தும் அலைகள் மோதும் போது பதற்றம் அடைகின்றனர். (ஸூரா - யூனுஸ்; பிரிவு: 3)

10. துன்பங்களில் இருந்து காப்பாற்றுமாறு அல்லாஹ்விடம் அவர்கள் கேட்கிறார்கள். அல்லாஹ் அவர்களைக் காப்பாற்றும்போது அவர்கள் எல்லை மீறத் தொடங்கிவிடுகிறார்கள். (ஸூரா - யூனுஸ்; பிரிவு: 3)

11. மக்களே! உங்களின் அடாத செயல்கள் உங்களுக்கே கேடாக முடியும். இவ்வுலக வாழ்க்கையில் சிறிது சுகம் அனுபவிக்க முடியும். இறுதியில் நம்மிடமே நீங்கள் திரும்ப வர வேண்டியதிருக்கிறது. (ஸூரா - யூனுஸ்; பிரிவு: 3)

12. நன்மை செய்தவர்களுக்கு அதன் பிரதிபலனும், அதைவிட கூடுதல் நன்மையும் கிடைக்கும். அதாவது அல்லாஹ்வை தரிசிக்கும் பாக்கியம் அவர்களுக்கு கிடைக்கிறது. (ஸூரா - யூனுஸ்; பிரிவு: 3)

## ஒரு பார்வை - பகுதி 3

**நிராகரிப்பாளர்கள் குர்ஆன் போன்ற ஒரு ஸூராவை உருவாக்க முடியுமா? என அல்லாஹ் சவால் விடுகிறான். மேலும் ஒவ்வொரு மனிதனும் தனது செயல்களுக்கு பொறுப்பேற்க வேண்டும் என்பதை நினைவூட்டுகிறான். மனிதர்கள் தங்களுக்குள் அநீதி இழைத்துக் கொள்கின்றனர். ஆனால், அல்லாஹ் மனிதர்களுக்கு நீதியானவன். நியாயத்தீர்ப்பு நாளில், அவர்கள் உலகில் வாழ்ந்தது ஒரு சிறிய காலம் போல் தோன்றும்.**

## தராவிஹ் - 9: (ரக்அத் 9 முதல் 12)

### ஸூரா - 10, யூனுஸ்; வசனம்: 31 - 70; பிரிவு: 4 - 7

1. **இணை வைத்து வணங்கப்படும் தெய்வங்களால் எதையேனும் படைக்க முடியுமா? அதை மீண்டும் படைக்க முடியுமா? அவ்வாறாயின் மனிதர்கள் எவ்வாறு திசை திருப்பப் படுகிறார்கள்? (ஸூரா - யூனுஸ்; பிரிவு: 4)**

2. **அவர்களில் பெரும்பாலோர், ஊகத்தையே பின்பற்றுகின்றனர். நிச்சயமாக ஊகம், உண்மைக்குப் பதிலாக ஒரு போதும் பயன்படாது. (ஸூரா - யூனுஸ்; பிரிவு: 4)**

3. **இந்த குர்ஆனை, இறைத் தூதரே இயற்றியுள்ளார் என அவர்கள் கூறுகின்றனரா? அப்படியானால். இதுபோல ஒரு ஸூராவையாவது அவர்களால் கொண்டுவர முடியுமா? (ஸூரா - யூனுஸ்; பிரிவு: 4)**

4. **நபியே! உங்களை பொய்யரென அவர்கள் கூறினால், நீர் அவர்களை நோக்கி, “என் வினை எனக்கு. உங்கள் வினை உங்களுக்கு. நான் செய்தவற்றிலிருந்து நீங்கள் விலகியவர்கள். நீங்கள் செய்தவற்றிலிருந்து நான் விலகியவன்” என்று கூறுவீராக! (ஸூரா - யூனுஸ்; பிரிவு: 5)**

5. மனிதர்களுக்கு அல்லாஹ் ஓர் அணு அளவும் அநீதி இழைப்பதில்லை. மனிதர்கள்தான் தமக்குத் தாமே அநீதி இழைத்துக் கொள்கின்றனர். (ஸூரா - யூனூஸ்; பிரிவு: 5)

6. பூமியில் வசித்த காலம் சில மணி நேரங்கள் என்றே, மறுமையில் அவர்களுக்கு தோன்றும். (அல்லாஹ் ஸூரா - யூனூஸ்; பிரிவு: 5)

7. ஒவ்வொரு சமூகத்தினருக்கும் ஒரு குறிப்பட்ட காலத்தவணை உண்டு. அத்தவணை வந்து விட்டால் ஒரு நாழிகைகூட பிந்தவும் மாட்டார்கள், முந்தவும் மாட்டார்கள். (ஸூரா - யூனூஸ்; பிரிவு: 5)

8. அநீதி இழைத்தோர், பூமியில் சேர்த்துவைத்த அனைத்தையும் கொடுத்து தங்களை தண்டனையிலிருந்து தப்பிக்க முயல்வார்கள். அம்முயற்சி வீணே! (ஸூரா - யூனூஸ்; பிரிவு: 6)

9. அல்குர்ஆன் அல்லாஹ்வின் அருளாகவும், கருணையாகவும் உள்ளது. அதனால் அவர்கள் மகிழ்ச்சி கொள்ளட்டும். அது அவர்கள் சேர்த்து வைத்திருக்கும் எல்லா செல்வங்களையும் விட மேலானது. (ஸூரா - யூனூஸ்; பிரிவு: 6)

10. குர்ஆனிலிருந்து நீங்கள் எதை ஓதினாலும், எந்தக் காரியத்தை நீங்கள் செய்தாலும், நீங்கள் அவற்றில் ஈடுபட்டிருக்கும்போது அல்லாஹ் கவனிக்காமல் இல்லை. (ஸூரா - யூனூஸ்; பிரிவு: 7)

11. பூமியிலோ, வானத்திலோ ஓர் அணுவானாலும் அதை விடச் சிறியதோ, பெரியதோ எதுவானாலும் உம் இறைவனுக்குத் தெரியாமல் மறைந்து விடுவதில்லை. அவன் பதிவேட்டில் இல்லாமலும் இல்லை. (ஸூரா - யூனூஸ்; பிரிவு: 7)

## ஒரு பார்வை - பகுதி 4

**நூஹ் (அலை) தம் மக்களை எச்சரித்தார், ஆனால் அவர்கள் நிராகரித்தனர். அதனால் அல்லாஹ் நூஹ் (அலை) அவர்களைக் காப்பாற்றி, நிராகரிப்பவர்களை வெள்ளத்தில் மூழ்கடித்தான். இதேபோல், ஃபிர்அவ்னும், மூஸா (அலை) அவர்களை நிராகரித்தான். மூஸா (அலை) சூனியக்காரர்களை தோற்கடித்ததையும், ஃபிர்அவ்னையும் அவனது படையையும் அல்லாஹ் மூழ்கடித்ததையும், எதிர்கால சந்ததியினருக்கான அடையாளமாக ஃபிர்அவ்னின் உடலைப் பாதுகாத்ததையும் குறிப்பிடுகிறான். யூனுஸ் (அலை) மக்களின் தனித்துவமான பண்பும் குறிப்பிடப்பட்டுள்ளது.**

## தராவிஹ் - 9: (ரக்அத் 13 முதல் 16)

### ஸூரா - 10, யூனுஸ்; வசனம்: 71 - 109; பிரிவு: 8 - 11

1. **நூஹ் (அலை) தம் சமூகத்தாரிடம், "நான் உங்களிடையே இருப்பதும், அல்லாஹ்வின் அத்தாட்சிகளை நினைவூட்டுவதும் உங்களுக்குப் பளுவாகத் தோன்றினால் (நான் பொருட்படுத்தமாட்டேன். ஏனென்றால்), நான் அல்லாஹ்வின் மீதே முழு நம்பிக்கை வைத்துள்ளேன்" (ஸூரா - யூனூஸ்; பிரிவு: 8)**

2. **ஆனால் அம்மக்கள் அவரை ஏற்கவில்லை. நூஹ் நபியையும் அவரைச் சார்ந்தோரையும் கப்பலில் ஏற்றி அல்லாஹ் காப்பாற்றினான். அவர்களை அதிபதிகளாக்கினான். பொய்யர்களை வெள்ளத்தில் மூழ்கடித்தான். (ஸூரா - யூனூஸ்; பிரிவு: 8)**

3. **பின்னர் மூஸாவையும், ஹாரூனையும் அத்தாட்சிகளுடன் பிர்அவுனிடமும் அவனது சமூகத்தாரிடமும் அல்லாஹ் அனுப்பி வைத்தான். அவர்கள் கர்வத்துடன் அதனை சூனியம் எனக் கூறி மறுத்தனர். (ஸூரா - யூனூஸ்; பிரிவு: 8)**

4. ‘தங்கள் மூதாதையர்களின் நம்பிக்கையிலிருந்து திசை திருப்பவே, மூஸாவும், ஹாரூனும் வந்துள்ளனர்’ என அவர்கள் கூறினர். (ஸூரா - யூனூஸ்; பிரிவு: 8)

5. பின்னர் நடந்த போட்டியில், மூஸா (அலை) அவர்கள் பிர்அவ்னின் சூனியக்காரர்களை வென்றார்கள். (ஸூரா - யூனூஸ்; பிரிவு: 8)

6. என் சமூகத்தாரே! "நீங்கள் அல்லாஹ்வை நம்பிய உண்மையான முஸ்லீம்களாக இருந்தால், நீங்கள் அவனையே பூரணமாக நம்பி உங்கள் காரியங்களை ஒப்படைத்து விடுங்கள்” என்று மூஸா (அலை) கூறினார். அதற்கு அவர்கள், “நாங்கள் அவ்வாறே செய்கிறோம்" என்று கூறி, "எங்கள் இறைவனே! அநியாயம் செய்யும் கூட்டத்தாருக்கு எங்களை ஒரு சோதனையாக ஆக்கிவிடாதே!” என்று பிரார்த்தித்தார்கள். (ஸூரா - யூனூஸ்; பிரிவு: 9)

7. அல்லாஹ் வஹீ மூலம் மூஸாவுக்கும், அவருடைய சகோதரருக்கும், “நீங்கள் இருவரும் உங்கள் சமூகத்தாருக்காக நகரத்தில் வீடுகளை அமைத்துக் கொடுங்கள். உங்களுடைய அவ்வீடுகளையே பள்ளிகளாக ஆக்கி அவற்றில் தவறாமல் தொழுகையை நிலைநிறுத்துங்கள். மேலும், நம்பிக்கை கொண்டவர்களுக்கு நற்செய்திகளும் கூறுங்கள்!” என்று அறிவித்தான். (ஏனென்றால், பிர்அவுன் பொது இடங்களில் தொழுகைக்கு தடை செய்து இருந்தான்). (ஸூரா - யூனூஸ்; பிரிவு: 9)

8. “இறைவா! பிர்அவ்ன் மற்றும் அவன் கூட்டத்தாரின் செல்வங்களைச் சிதைத்து, அவர்களின் இதயங்களில் இறுக்கத்தை ஏற்படுத்துவாயாக! அவர்கள் தண்டனையைக் காணாத வரை நம்பிக்கை கொள்ள மாட்டார்கள்” என்று மூஸா பிரார்த்தித்தார். (ஸூரா - யூனூஸ்; பிரிவு: 9)

9. அல்லாஹ் அவர்களின் பிரார்த்தனையை ஏற்று, பிர்அவ்னையும், அவனது படையையும் கடலில் மூழ்கச் செய்தான். (ஸூரா - யூனூஸ்; பிரிவு: 9)

10. அந்த வேளையில், தான் அல்லாஹ்வை நம்புவதாக பிர்அவ்ன் கூறி கதறினான். (ஸூரா - யூனூஸ்; பிரிவு: 9)

11. அதற்கு அல்லாஹ், “சற்று முன்பு வரை நீ மாறு செய்து கொண்டு குழப்பவாதிகளில் ஒருவனாகவே இருந்தாய்” எனக் கூறினான். அவனது உடலை உலகம் உள்ளவரை பாதுகாத்து, பின்வரும் சந்ததிகளுக்கு ஒரு அத்தாட்சியாகவும் அல்லாஹ் ஆக்கினான். (ஸூரா - யூனூஸ்; பிரிவு: 9)

12. யூனூஸ் (அலை) உடைய சமூகத்தார் மட்டும் அல்லாஹ்வை ஏற்றுக் கொண்டு அவனை வழிபட்டார்கள். (ஸூரா - யூனூஸ்; பிரிவு: 10)

13. “அதனால் இம்மையில் இழிவுபடுத்தும் வேதனையை அவர்களை விட்டு நாம் நீக்கி விட்டோம். மற்றும் சிறிது காலம் சுகம் அனுபவிக்கவும் அவர்களை நாம் விட்டு வைத்தோம்” என அல்லாஹ் கூறுகிறான். (ஸூரா - யூனூஸ்; பிரிவு: 10)

14. விசுவாசிகளே! அல்லாஹ்வையே வணங்குங்கள். இணை வைப்பவர்களில் ஒருவராக ஆகி விட வேண்டாம். (ஸூரா - யூனூஸ்; பிரிவு: 11)

15. அல்லாஹ், உமக்கு ஒரு கஷ்டத்தைக் கொடுத்தால் அதை நீக்குபவன் அவனைத் தவிர வேறு யாருமில்லை. அவன் உமக்கு ஒரு நன்மையை நாடிவிட்டால், அவனது அருளைத் தடுப்பவர் யாருமில்லை. (ஸூரா - யூனூஸ்; பிரிவு: 11)

## ஒரு பார்வை - பகுதி 5

**அல்லாஹ் மக்களை சோதிப்பதற்காகவே வானங்களையும், பூமியையும் படைத்தான். நூஹ் (அலை) வரலாறு மற்றும் அவர்கள் கட்டிய கப்பல் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களது மகன் கப்பலில் ஏற மறுத்ததால் இறக்க நேர்ந்தது.**

## தராவிஹ் - 9: (ரக்அத் 17 முதல் 20)

### ஸூரா - 11, ஹூது; வசனம்: 1 - 49; பிரிவு: 1 - 4

1. அல்லாஹ்தான் வானங்களையும், பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான். அப்போது அவனுடைய “அர்ஷ்” நீரின் மீது இருந்தது. (ஸூரா - ஹூது; பிரிவு: 1)

2. உங்களில் நற்செயல் செய்பவர் யார் என்று உங்களை பரிசோதிப்பதற்காகவே இவைகளை அவன் படைத்தான். (ஸூரா - ஹூது; பிரிவு: 1)

3. நூஹை அவரது சமூகத்தாருக்கு நபியாக அனுப்பிவைத்தோம். ‘அல்லாஹ்வை தவிர வேறு யாரையும் வணங்கக்கூடாது; அப்படிச் செய்தால் வதைக்கும் வேதனை உண்டு’ என்று அவர் அம்மக்களை எச்சரிக்கை செய்தார். (ஸூரா - ஹூது; பிரிவு: 3)

4. நூஹ் (நபி) தம் மக்களிடம், “நான் உங்களிடம் பணம் எதையும் கேட்கவில்லை. இறைநம்பிக்கை கொண்டோரை நான் துரத்தப்போவதுமில்லை. அறியாத மக்களாகவே நான் உங்களைக் காணுகிறேன்” என கூறினார்கள். (ஸூரா - ஹூது; பிரிவு: 3)

5. அதற்கு அம்மக்கள், “நூஹே! நீர் எங்களுடன் அதிகமாகவே தர்க்கம் செய்துவிட்டீர். நீர் எச்சரித்த வேதனையை எங்களிடம் கொண்டுவாரும்” என இறுமாப்புடன் கூறினர். (ஸூரா - ஹூது; பிரிவு: 3)

6. அல்லாஹ், தன் கண் முன்பாகவே, தான் அறிவித்தபடியே, ஒரு கப்பலை கட்டுமாறு நூஹ் நபிக்குக் கட்டளையிட்டான். (ஸூரா - ஹூது; பிரிவு: 4)

7. அல்லாஹ்வின் ஆணை பிறப்பிக்கப்பட்டது. பூமியின் மேற்பரப்பில் தண்ணீர் பொங்கியது. அக்கப்பலில் ஒவ்வொன்றிலிருந்தும் ஆண் பெண் ஜோடி ஒன்றையும், நூஹ் நபியின் குடும்பத்தையும், அவரது மகனை தவிர மற்ற எல்லா விசுவாசிகளையும் ஏற்றிக் கொள்ள அல்லாஹ் கட்டளையிட்டான். இறைநம்பிக்கை கொண்டவர்கள் மிக சொற்பமானவர்களே இருந்தனர். (ஸூரா - ஹூது; பிரிவு: 4)

8. நூஹ் (நபி) அவர்கள், "இந்த கப்பல் ஓடுவதும், நிற்பதும் அல்லாஹ்வின் பெயராலேயே நிகழ்கின்றன. நிச்சயமாக என் இறைவன் மன்னிப்பவனாகவும், கிருபையுடையவனாகவும் இருக்கின்றான்" என்று கூறினார்கள். (ஸூரா - ஹூது; பிரிவு: 4)

9. நூஹ் தன் மகனை தன்னுடன் வருமாறு அழைத்தார். அவன் அதனை மறுத்து விட்டான், பின்னர் தண்ணீரில் மூழ்கடிக்கப்பட்டான். (ஸூரா - ஹூது; பிரிவு: 4)

10. பின்னர், “பூமியே! நீ உன் தண்ணீரை விழுங்கிவிடு; வானமே! நீ நிறுத்திக்கொள்” என்று கூறப்பட்டது. வெள்ளம் வடிந்தது. அதன் பின்பு அந்த கப்பல் அல்ஜூதி மலைக் குன்றில் நிலைகொண்டது. அநீதியிழைக்கும் சமூகத்துக்கு அழிவுதான். (கப்பலில் ஏறிக்கொண்டவர்கள் மட்டும் பிழைத்தனர்). (ஸூரா - ஹூது; பிரிவு: 4)

11. தன் மகன் காப்பாற்றப்படவேண்டும் என்று நூஹ் நபி அல்லாஹ்விடம் கேட்டார்கள். (ஸூரா - ஹூது; பிரிவு: 4)

12. அதற்கு அல்லாஹ், “நூஹே! நிச்சயமாக அவன் உன் குடும்பத்திலுள்ள ஒருவன் அல்லன். அவன் ஒழுங்கீனமான செயலுடையவன். ஆதலால், நீர் தர்க்கம் செய்து

அறியாதோரில் ஒருவராகி விட வேண்டாம்" என கூறினான். (ஸூரா - ஹூது; பிரிவு: 4)

13. அதற்கு நூஹ் நபி, "என் இறைவனே! நான் அறியாத விஷயங்களைப் பற்றி உன்னிடம் கேட்பதிலிருந்து நான் உன்னிடமே பாதுகாப்புக் கோருகிறேன். நீ என்னை மன்னித்து, எனக்கு நீ கிருபை செய்யாவிடில், நானும் நஷ்டமடைந்தோரில் ஒருவனாகி விடுவேன்" என்றார். (ஸூரா - ஹூது; பிரிவு: 4)

14. அல்லாஹ் முகம்மது நபியிடம், "நபியே! இவை மறைவான சரித்திரச் செய்திகள். இவற்றை நாம்தான் உமக்கு அறிவிக்கிறோம். எனவே பொறுமை காப்பீராக! நிச்சயமாக இறையச்சம் உடையோருக்கே முடிவு சாதகமாக இருக்கும்", எனக் கூறினான். (ஸூரா - ஹூது; பிரிவு: 4)

---------------------------------------